# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# DEVAKOTTAI

**CC.No.172/2025**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | காந்தி பிச்சை |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | செல்லையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 28.04.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர் திரு.ஜெயபாலன் அவரையும் அவருடைய கையொப்பத்தையும் நன்கு தெரியும். அதனால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 26.01.2025 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ஜெயபால், முதல்நிலைக் காவலர் ரஞ்சித் மற்றும் முதல்நிலைக்காவலர் ராஜேஷ் ஆகியோர்கள் மதுவிலக்கு மற்றும் குற்றத்தடுப்பு சம்பந்தமாக ரோந்து சென்றபோது கண்ணங்குடி ஊரணி அருகே மதுவிற்பதாக சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின்பேரில் ரோந்து சென்று அங்கு கண்காணித்தபோது சந்தேகத்திற்கு இடமான TN 63 CZ 9056 என்ற

பதிவு எண் கொண்ட suzuki acces இரு சக்கர வாகனத்தில் நின்றவர் போலீஸ் பார்ட்டியை கண்டதும் இரு சக்கர வாகனத்துடன் தப்பி ஓட எத்தனித்தவரை போலீஸ் பார்ட்டி சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க அவர் பெயர் வைரவசுந்தரம், வயது 51, த.பெ.சாத்தையா, தேவகோட்டை தாலுகா, கண்ணங்குடி கிராமம் என்று தெரிவித்தார். மேலும் அவரது இரு சக்கர வாகனத்தை சோதனை செய்தபோது அதில் உட்காரும் சீட்டின் அடியில் உள்ள பெட்டிக்குள் சாக்குப்பையில் மூடி திறக்காமல் மதுவும் mensclub 180ml அளவுள்ள 29 பிராண்டி பாட்டில்கள் 5.220 லிட்டர் honeybee 180 ml அளவுள்ள 6 பாட்டில்கள் 1.80 லிட்டர் mensclub 180 ml அளவுள்ள மூடி திறந்து மூடிய நிலையில் அரைகுறை அளவுடன் 2 பாட்டில்களும் இருந்தது. அதைபற்றி விசாரிக்க மேற்படி நபர் தானாக முன்வந்து 7.15 மணிக்கு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் வழக்கமாக அரசு மதுபான கடையில் மதுவை வாங்கி அரசு அனுமதியின்றி பிறருக்கு அதிக விலையில் விற்று லாபம் பெறும் நோக்கத்துடன் விற்பனைக்காக வைத்திரருந்ததாக தெரிவித்தார். மேலும் பாட்டிலில் பாதி மது வேண்டும் என்று கேட்பவர்களுக்கு ஊற்றி கொடுத்துவிட்டு மீதம் இருக்கும் பாதி மதுவை அடுத்து கேட்டு வருபவர்களுக்கு ஊற்றி கொடுப்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும் அவரிடம் இருந்த சொத்துக்களை கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் காவலர் முன்பாக அத்தாட்சி மகஜர் தயார் செய்து அத்தாட்சியில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றி காவல் நிலையம் கொண்டு வந்து மாண்புமிகு உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி தேவகோட்டை தாலுகா குற்ற எண்.25/2025, 4(1)(A) TNP Act-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

பின்பு எதிரியிடம் பெற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் எதிரியை கைது செய்து சமூகம் நீதிமன்ற காவல் அடைப்புக்கு உட்படுத்தியுள்ளார். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **(மேற்படி படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தில் TN 63 CZ 9056 suziki இரு சக்கர வாகனத்தை மனுதாரர் சமூகம் நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றுவிட்டார். **(மேற்படி இரு சக்கர வாகனத்தின் நிழற்படம் அ.சா.ஆ 7 குறியீடு செய்யப்படுகிறது.) (கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் மூடி திறக்காமல் மதுவுடன் இருந்த mensclub 180ml அளவுள்ள 29 பிராண்டி பாட்டில்கள் 5.220 லிட்டர் அ.சா.பொ.1 ஆகவும் honeybee 180 ml அளவுள்ள 6 பாட்டில்கள் 1.80 லிட்டர் அ.சா.பொ.2 ஆகவும் mensclub 180 ml அளவுள்ள மூடி திறந்து மூடிய நிலையில் அரைகுறை அளவுடன் 2 பாட்டில்கள் அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 4(1)(A) TNP Act-ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

சார்பு ஆய்வாளர்களுக்கு அரசு மடிக்கணிணி எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். ஒரு வழக்கு சம்பந்தமாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்துதான் பிரிண்ட் எடுக்க முடியும் என்றும் வெளியில் வேறு எங்கும் எடுக்க முடியாது என்றால் சரிதான். ஒரு வழக்கில் எதிரியை கைது செய்தோ அல்லது எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்தபிறகுதான் குற்ற எண் கொடுப்போம் என்றால் சரிதான். மதுபான கடைகள் விடுமுறை அன்று மதுவிலக்கு சம்பந்தமான வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும் என்பதற்காக எதிரி மீது பொய்யாக இந்த வழக்கினை தாக்கல்

**செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் வழக்கில் குறிப்பிட்ட சம்பவம் என்று எதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.